an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 4.1 - மூதுரை

GRADE- VI

QUESTION BANK

## குறுவினா

1. **“மூதுரை” என்னும் சொல்லின் பொருள் யாது?**

- “மூதுரை” என்னும் சொல்லின் பொருள் “மூத்தோர் கூறும் அறிவுரை” என்பதாகும்

2. **ஔவையார் - குறிப்பு வரைக**

- மூதுரையின் ஆசிரியர் ஔவையார் ஆவார்.
- இவர் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி என்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

3. **மூதுரை - நூற்குறிப்பு வரைக**

- மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்.
- சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது.
- இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

4. **கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

- மன்னனையும் குற்றம் இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர்.
- மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.